No. of Printed Pages : **6**

**6775**

பதிவு எண் | | | | | | | |

# பகுதி — III— சிறப்புத் தமிழ்

# Part - III - ADVANCED LANGUAGE - TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** அழகிய சொக்கநாதர் இப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர் :

(அ) அந்தாதிப் பாடல் (ஆ) சித்திரகவி

(இ) நாட்டுப்புறப் பாடல் (ஈ) சிலேடைப் பாடல்

**2.** 'ரென்கா' பாடல் மரபிலிருந்து தோன்றியது __________ கவிதை வடிவம்.

(அ) ஹைக்கூ (ஆ) சென்ரியூ (இ) லிமெரைக்கூ (ஈ) லிமெரிக்

**3.** பாடுக என்றதும் பாடுவோன் :

(அ) மதுரகவி (ஆ) சித்திரகவி (இ) ஆசுகவி (ஈ) வித்தாரகவி

**4.** கவிஞர் மு. மேத்தாவின் 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்னும் கவிதை நூல் எந்த ஆண்டு சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது ?

(அ) 2006 (ஆ) 2002 (இ) 2009 (ஈ) 2004

[ திருப்புக

5. **கூற்று** : கதையின் நிகழ்வுகள் யாருடைய பார்வையிலிருந்து சொல்லப்படுகின்றன என்பதே நோக்கு நிலை.

**காரணம்** : கதை சொல்லுதலின் நோக்குநிலை சிறுகதைகளுக்கான உத்திகளுள் ஒன்று.

(அ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி ஆனால் **காரணம் கூற்றுக்கான** சரியான விளக்கமன்று

(ஆ) **கூற்று** சரி, **காரணம்** தவறு

(இ) **காரணம், கூற்று** இரண்டும் தவறு

(ஈ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி **காரணம் கூற்றுக்கான** சரியான விளக்கம்

6. ஜெயகாந்தனின் ‘பூ உதிரும்’ கதையின்படி கீழ்க்காண்பவை எதனோடு தொடர்புபடுத்தப்-படுகின்றன ?

| | | | |
|---|---|---|---|
| (1) | அரும்பு மீசை | (i) | சுருட்டுப் புகை |
| (2) | முறுக்கு மீசை | (ii) | முதல் உலகப் போர் |
| (3) | நரைத்த மீசை | (iii) | இரண்டாவது உலகப் போர் |
| (4) | பழுப்பேறிய மீசை | (iv) | தளர்ந்த உடல் |

(அ) (1)-(i), (2)-(iii), (3)-(iv), (4)-(ii)

(ஆ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(இ) (1)-(iii), (2)-(ii), (3)-(iv), (4)-(i)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

7. பொருந்தும் இணையைக் கண்டறிக.

(அ) நசுக்கம் - ஜெயகாந்தன்

(ஆ) ரப்பர் பந்து - ஹெச்.ஜி. ரசூல்

(இ) இறுக மூடிய கதவுகள் - ஆர். சூடாமணி

(ஈ) பூ உதிரும் - சோ. தர்மன்

8. கீழ்க்காண்பனவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டறிக.

(1) வட்டவடிவில் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் அரங்கம் வட்டவடிவ அரங்கம்.

(2) படங்களுக்குப் போடும் சட்டத்தைப் போன்று அமைந்திருப்பது படச்சட்ட அரங்கம்.

(3) பார்வையாளர்களின் வீடுகளுக்கு அருகில் அமைந்திருப்பது அண்மை அரங்கம்.

(4) திரையரங்குகள் போன்ற வடிவத்தில் அமைந்தவை திறந்த வெளி அரங்குகள்.

(அ) அனைத்தும் சரி (ஆ) (1) மற்றும் (3) சரி

(இ) (3) மற்றும் (4) சரி (ஈ) (1) மற்றும் (2) சரி

**9.** ''ஆயிரம் பேரில் ஒருவரே கவிஞர், பத்தாயிரம் பேரில் ஒருவரே பேச்சாளர்'' என்று கூறியவர் __________.

(அ) ஆர்.எஸ். மனோகர் (ஆ) பாலாமணி அம்மையார்

(இ) மதுரகவி பாஸ்கரதாஸ் (ஈ) ஔவையார்

**10.** நாடகத்தின் அடிப்படை அலகு :

(அ) காட்சி (ஆ) களம் (இ) உரையாடல் (ஈ) அங்கம்

**11.** தண்டியலங்காரம்-தண்டி; இறையனார் அகப்பொருள்-இறையனார்; நம்பியகப்பொருள் - நம்பி; வீரசோழியம் - ?

(அ) புத்தமித்திரர் (ஆ) வீரசோழர்

(இ) வீரமாமுனிவர் (ஈ) குணவீரபண்டிதர்

**12.** வண்ணச் சினைச் சொல்லைக் குறிக்காத தொடர் __________.

(அ) அழகிய மரம் (ஆ) செங்கால் நாரை

(இ) பைந்தண்டுத் தாமரை (ஈ) கரிகால் வளவன்

**13.** சதுரகராதியின் சொற்பொருள் விளக்க வரிசைமுறை :

(அ) பெயர், பொருள், தொடை, தொகை

(ஆ) பெயர், பொருள், தொகை, தொடை

(இ) பெயர், தொகை, தொடை, பொருள்

(ஈ) பெயர், தொடை, தொகை, பொருள்

**14.** 'டிரான்ஸ்லேசியோ' (Translatio) என்னும் சொல் இடம் பெற்றுள்ள மொழி :

(அ) ஆங்கிலம் (ஆ) கிரேக்கம் (இ) பிரெஞ்சு (ஈ) இலத்தீன்

**15.** பொருத்துக :

| | **உள்ளடக்கம்** | | **இதழின் பெயர்** |
|---|---|---|---|
| (1) | கல்வி வளர்ச்சி | (i) | சம்பாரத் கௌமதி |
| (2) | மருத்துவம் | (ii) | கலைக்கதிர் |
| (3) | பெண் உரிமைகள் | (iii) | மூலிகைமணி |
| (4) | அறிவியல் | (iv) | ஜனவிநோதினி |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)

(ஆ) (1)-(i), (2)-(iii), (3)-(iv), (4)-(ii)

(இ) (1)-(iii), (2)-(ii), (3)-(i), (4)-(iv)

(ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i)

[ திருப்புக

**16.** இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படம் வெளியிட்ட இதழ் :

(அ) தில்லி ஸ்கெட்ச் புக் (ஆ) இந்தியா

(இ) அமிர்தபஜார் பத்திரிகா (ஈ) மதராஸ் மெயில்

**17.** பாரதியார், கருத்துப்படங்களை எவ்வாறு அழைத்தார் ?

(அ) விகடசித்திரம் (ஆ) கேலிச்சித்திரம்

(இ) கூடார்த்தபடம் (ஈ) விளக்கப்படம்

**18.** பத்துப்பாட்டினைப் பதிப்பித்தவர் :

(அ) ஆறுமுக நாவலர் (ஆ) உ.வே. சாமிநாதர்

(இ) வ.உ. சிதம்பரனார் (ஈ) சி.வை. தாமோதரனார்

**19.** இணையத்தில் தமிழ் இடம்பெறக் காரணமாய் இருந்தவர் __________.

(அ) செ. வேலுச்சாமி (ஆ) ந. மயில்சாமி

(இ) செ. சின்னச்சாமி (ஈ) நா. கோவிந்தசாமி

**20.** இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைய இதழ் :

(அ) வார்ப்பு (ஆ) திண்ணை (இ) கீற்று (ஈ) பதிவுகள்

## பகுதி - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**21.** வானம்பாடி இதழ் எங்கு, எப்போது வெளிவந்தது ?

**22.** சித்திரக்கவியின் தோற்றுவாய் பற்றி எழுதுக.

**23.** பேபி குட்டி - பெயர்க்காரணம் தருக.

**24.** பேச்சுக் கலையின் வடிவங்களுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.

**25.** தொடரில், வேற்றுமையுருபுகள் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

**26.** சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கக்கூடாது என்பதைச் சான்றுடன் விளக்குக.

**27.** ⁓, ⅃ ஆகிய இரண்டு குறிகளும் மெய்ப்புத் திருத்துதலில் எவற்றைக் குறிக்கின்றன ?

**28.** ஆர்பா நெட் (ARPA NET) உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது ?

**29.** நொண்டி நாடகம் குறித்து இரண்டு கருத்துகள் தருக.

**30.** மக்களாட்சியின் நான்காவது தூண் குறித்து எழுதுக.

## பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**31.** புதுக்கவிதையில் குறியீடு – குறிப்பு வரைக.

**32.** இயந்திர மொழிப்பெயர்ப்பு குறித்து விவரிக்கவும்.

**33.** சிறுகதை வடிவத்தின் உறுப்புகளை எழுதுக.

**34.** சிலப்பதிகாரம் குறிப்பிடும் மூவகை எழினிகள் யாவை ?

**35.** நன்னூல் – குறிப்பு வரைக.

**36.** கலைக்களஞ்சியம் என்றால் என்ன ? விளக்குக.

**37.** இந்தியப் பத்திரிகைகளுக்கு நேரு கூறிய அறிவுரை யாது ?

**38.** இணைய இணைப்பைப் பெறச் செய்யவேண்டியவை யாவை ?

**39.** நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியக் கவிஞர் யார் ? எந்த ஆண்டு ? எந்நூலுக்காகப் பெற்றார் ?

**40.** கணினியில் வைரஸ் தாக்குதலும் பாதுகாப்பும் குறித்து எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) லிமெரிக், லிமெரைக்கூ – வேறுபடுத்துக.

**அல்லது**

(ஆ) தாயன்பின் பெருமைகளை மகள் எங்ஙனம் எடுத்துரைக்கிறாள் ?

**42.** (அ) சிறுகதையின் மொழிநடை குறித்து ஆய்க.

**அல்லது**

(ஆ) 'பூ உதிரும்', 'யானையின் சாவு' ஆகிய கதைகளில் வரும் தந்தைப் பாத்திரப் படைப்புகளின் பண்புநலன்களை ஒப்பிடுக.

**43.** (அ) பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணிகள் குறித்து விளக்குக.

**அல்லது**

(ஆ) பட்டிமன்றம், வழக்காடு மன்றம் – வேறுபடுத்துக.

**44.** (அ) தொல்காப்பிய இயல்களின் வளர்ச்சியாகத் தோன்றிய பிற்கால இலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

**அல்லது**

(ஆ) வழுநிலை, வழாநிலை, வழுவமைதி ஆகியவற்றுக்கு நடைமுறை எடுத்துக்-காட்டுகள் தந்து விளக்குக.

**45.** (அ) கணினித் துறையில் அகராதியின் பங்கு குறித்து எழுதுக.

**அல்லது**

(ஆ) மொழி வளர்ச்சிக்கு, மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது ? விளக்குக.

**46.** (அ) இணையத்தில் தமிழ் இடம் பெற்ற விதத்தினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து விவரிக்கவும்.

**47.** (அ) உமக்கான வலைப்பூவை உருவாக்க நீவிர் பின்பற்ற வேண்டிய படிநிலைகள் யாவை ?

**அல்லது**

(ஆ) முகநூல், புலனம், கீச்சகம் குறித்து எழுதுக.

- o O o -